# வேளாண் விளைபொருட்களுக்கு உறுதி செய்யப்பட்ட லாபகரமான விலை பெறுவதற்கான விவசாயிகளின் உரிமை சட்ட வரைவு, 2017

***சுருக்கம்***

*வேளாண் விளைபொருட்களை விற்கும் போது உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலையைப் பெறும் உரிமையை அனைத்து விவசாயிகளுக்கும் அளிப்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய விஷயங்கள் அல்லது எதிர்பாராத நிகழ்வுகள் குறித்த சட்ட வரைவு*

விவசாயிகள் உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலையைப் பெறும் அம்சங்கள் இந்தச் சட்ட வரைவில் உள்ளன. அவை:

**அத்தியாயம் I: வரையறைகள்**

1. **“வேளாண்மை”** என்பது தோட்டக்கலை, மூலிகைச் செடிகள், பயிர்கள் மற்றும் கலப்புப் பயிர்கள், பழங்கள், காய்கறிகள், பால் உற்பத்தி, காடுகளிலுள்ள மதிப்பு குறைவான பொருட்களைச் சேகரித்தல், பூக்கள், புல், தீவனப்புல், மரங்கள் அல்லது மண்ணின் மூலம் செய்யப்படும் எந்த வேளாண்மையும், நாற்று/மரக்கன்றுப் பண்ணை நடத்துதல், சிப்பிமீன் உட்பட்ட கால்நடை வளர்ப்பு, தேனீக்கள், பட்டுப்புழு, கோழிவளர்ப்பு, வாத்து, மாடு அல்லது பன்றி வளர்ப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த அல்லது வேளாண்மை பயன்பாட்டிற்கான எந்த நடவடிக்கைகளுக்காகவும் நிலத்தைப் பயன்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது
2. **“விவசாயி”** என்பது நிலவுடைமை இருந்தாலும், இல்லாவிட்டாலும் பயிர்வளர்ப்பு அல்லது பிற முதன்மை வேளாண் பொருட்களின் உற்பத்தி போன்ற பொருளாதார மற்றும்/அல்லது வாழ்வாதாரச் செயல்பாடுகளில் ஊக்கத்துடன் ஈடுபடும் நபரைக் குறிக்கும். மேலும், இது அனைத்து வகையான பயிரிடுபவர்கள், உழுபவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஈட்டுக்குப் பயிர் செய்பவர்கள், குத்தகைதாரர்கள், கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், மீனவர்கள், தேனீ வளர்ப்பவர்கள், மேய்ப்பாளர்கள், கார்ப்பரேட் அல்லாத தோட்டப் பயிரிடுவோர், தோட்ட வேலை செய்யும் தொழிலாளர்கள், காடுகளில் பொருட்களைச் சேகரிப்போர், கூட்டு நிலவுரிமை அல்லது குத்தகைக்கு நிலத்தை எடுத்துப் பயிர் செய்யும் சுய உதவிக் குழுவைச் சார்ந்தவர்கள் ஆகியோரைக் குறிக்கும்.
3. **“ஆணையம்”** என்பது ‘வேளாண் செலவு மற்றும் விலைக்கான ஆணையம் (CACP)’. விவசாயிகளின் செலவு மற்றும் விலையைக் குறித்து மட்டுமே இந்த ஆணையத்திற்கான அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் இருக்கும். தற்போதுள்ள ஆணையம், 11 உறுப்பினர்களைக் கொண்டதாக விரிவுபடுத்தப்படும். மண்டல ரீதியாக, துறை ரீதியாக, பாலின ரீதியாக சமச்சீரான பிரதிநிதித்துவம்

கொண்டதாக இந்த ஆணையம் அமையும். விவசாயப் பிரதிநிகளும் உறுப்பினர்களாக இருப்பர்.

4. **<u>"மாநில ஆணையம்"</u>** என்பது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட வேண்டிய மாநில அளவிலான வேளாண் செலவு மற்றும் விலைக்கான ஆணையங்களைக் குறிக்கும். இவை, மத்திய அரசு நிர்ணயிக்கும் உறுதி செய்யப்பட்ட லாபகரமான விலை(ARP)யை விட, அதிகமான விலையை நிர்ணயிக்கலாம். சட்டம் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் அமைப்பாகவும் இவை செயல்படும்.

## அத்தியாயம் II: அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும், உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலை பெறுவது அனைத்து விவசாயிகளின் உரிமை

1. அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும், உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலை பெறுவது அனைத்து விவசாயிகளின் உரிமை
2. இந்தச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட, பருவகாலப் பயிர்கள், தோட்டப்பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள், மதிப்பு குறைவான காட்டுப் பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து வேளாண் பொருட்களுக்கும், 'வேளாண் செலவு மற்றும் விலைக்கான ஆணையம் (CACP)' மூலம் விலை நிர்ணயிக்கும் முறைகளை அரசு உருவாக்கும்.
3. இதுவரை விலை கணக்கீடு செய்வதற்கான வழிமுறைகள் வகுக்கப்படாத பொருட்களுக்கு, அவற்றிற்கென வழிமுறைகளை அரசு உருவாக்கும். அதற்குத் தேவையான தரவுகள் குறிப்பிட்ட காலத்தில் திரட்டப்படும்.
4. கொடுக்கப்பட்டுவிட்ட செலவினங்கள், கணிக்கப்பட்ட செலவுகள், விவசாயக்கூலியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட குடும்ப உழைப்பு, மேலாண்மைச் செலவு ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான செலவுக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். குறைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் மறுஆய்வு செய்யப்பட்டு, திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
5. ஆணையம், அனைத்து வேளாண் பொருட்களுக்கும், முழுமையாகக் கணக்கிடப்பட்ட உற்பத்தி விலையைக் காட்டிலும் குறைந்தபட்சம் 50% அதிகமாக லாபம் கிடைக்கும் வகையில், உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலையை பரிந்துரைக்கும்
6. தென்மேற்கு பருவ மழைப் பயிர்களுக்கு (Kharif), ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியும், குளிர்காலப் பயிர்களுக்கு (Rabi), ஆகஸ்ட் 31 ஆம் தேதியும் விலை அறிவிக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் III: மத்திய 'வேளாண் செலவு மற்றும் விலைக்கான ஆணையம் (CACP)'

1. தற்போதுள்ள ஆணையம், தலைவர் உட்பட 11 உறுப்பினர்களைக் கொண்டதாக விரிவுபடுத்தப்படும். தலைவர் வேளாண் பொருளாதார வல்லுநராக இருக்கலாம்.

2. வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை (MoAFW) யிலிருந்து அதிகாரி ஒருவர் (1); விவசாயப் பிரதிநிதிகள் ஐவர் (5) , பிற வேளாண் வல்லுநர்கள் மூவர் (3), உறுப்பினர்-செயலாளர் ஒருவர் (1) ஆகியோர் இந்த ஆணையத்தில் உறுப்பினர்களாக இருப்பர்.
3. மண்டல/துறை/ பாலின ரீதியாக சமச்சீரான பிரதிநிதித்துவம் கொண்டதாக இந்த ஆணையம் அமையும்
4. வெளிப்படையான செயல்பாடு மற்றும் நலன் மோதலைத் (conflict of interest) தவிர்த்தல் போன்ற பிரிவுகளைச் சேர்த்தல்
5. ஆணையத்தின் (CACP) அதிகாரங்கள் (அதாவது தற்போதுள்ள செயல் அதிகாரங்கள் பெருமளவில் மாற்றம் செய்யப்பட வேண்டும்):
    - முழுமையாகக் கணக்கிடப்பட்ட செலவை விட, 50% கூடுதலாக லாபம் கிடைக்கும் வகையில், நிலையான சூத்திரத்தின் அடிப்படையில், அனைத்து வேளாண் பொருட்களுக்கும் உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலையை பரிந்துரைத்தல்
    - சந்தைக் கட்டமைப்பு மற்றும் சந்தை வழிமுறைகளை மேம்படுத்துவது உட்பட, விவசாயிகளுக்கு நிலையான மற்றும் லாபகரமான விலைச் சூழலை உறுதி செய்யும் அனைத்து பிற வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்
    - அனைத்து ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையிலும் ஆலோசிக்கப்பட வேண்டிய அதிகாரத்தைக் கொண்டிருத்தல். இதன் மூலம், அறிவிக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலையில் குறைந்தபட்ச பாதிப்பு ஏற்படும் வண்ணம், ஆணையத்திலுள்ள வல்லுநர்கள், தலைவருடன் இணைந்து செயல்பட்டு வணிகத் துறை அமைச்சகத்திற்கு பரிந்துரைகள் அளிக்கலாம்.

**அத்தியாயம் IV: வேளாண் விலைகளுக்கான மாநில ஆணையங்கள்**

1. மத்திய CACP யைப் போலவே, இந்த ஆணையங்களும் அமைக்கப்படும்
2. நடவடிக்கைகள் மற்றும் அதிகாரங்களில், மாநில ஆணையம், மத்திய ஆணையத்தால் உறுதி செய்யப்பட்ட, லாபகரமான விலை(ARP) (உற்பத்திச் செலவு அடிப்படையிலானது அல்லது குறிப்பிட்ட பயிருக்கான அரசுக் கொள்கையின் மூலமான ஊக்கத் தொகை)யுடன் கூடுதல் ஊக்கத்தொகை அறிவிக்கலாம். விலை நிலையைக் கண்காணித்தல், குறிப்பிட்ட பகுதி அல்லது பொருள் அடிப்படையில், பற்றாக்குறைத் தொகையை அளிக்க உத்தரவிடுதல், அரசு ஊழியர்கள் தங்கள் கடமையைச் சரியாக செய்யவில்லையெனில் விசாரணை நடத்துவது மற்றும் CACPக்கு பரிந்துரைகள் அனுப்புவது ஆகிய அதிகாரங்களை இந்த மாநில ஆணையங்கள் பெற்றிருக்கும்.

**அத்தியாயம் V: உறுதியளிக்கப்பட்ட, லாபகரமான விலையை நடைமுறைப் படுத்துதல்**

1. APMC சந்தைகள் உட்பட அனைத்து வேளாண் சந்தைகளிலும், அனைத்து பொருட்களுக்கும் ஏலத்திற்கான ஆரம்பத் தொகை அல்லது சலுகை விலை ARP தொகையை விடக் குறைவாக இருக்கக் கூடாது.
2. ஒப்பந்த வேளாண்மையில் ஈடுபட்டுள்ள வணிகர்கள் உட்பட வேளாண்பொருட்களை வாங்கும் எவரும், எந்த பொருளையும் ARPயை விடக் குறைவான விலைக்கு வாங்கக் கூடாது. அப்படி வாங்கினால் அவர் மீது சட்ட நடவடிக்கை பாயும்
3. தேவையான அளவு அண்மை கொள்முதல் மையங்களை அனைத்து வேளாண் பொருட்களுக்கும் திறக்க, அரசு கடமைப்பட்டுள்ளது. இதன்மூலம், அது தன்னுடைய உணவுப் பாதுகாப்பு திட்டங்களுக்கு அதிக அளவுள்ள, பல வேளாண்பொருட்களை வாங்க வேண்டும்.
4. தேவையான நிதியை ஒதுக்கி, பயனளிக்கக்கூடிய மற்றும் காலத்திற்குதவும் சந்தைத் தலையீட்டினை அரசு செய்ய கடமைப்பட்டுள்ளது.
5. அனைத்து பயிர்களுக்கும் பெருமளவில் சேமிப்புக் கிடங்குகளை உருவாக்கி, சேமிக்கப்பட்ட பயிர்களின் மொத்த மதிப்பில் 75% தொகையை உடனடியாக விவசாயிகள் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்து, நட்டத்திற்கு விவசாயிகள் விற்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு கடமைப் பட்டுள்ளது.
6. விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்க போதுமான நிதி ஒதுக்கீடு செய்வது, பதப்படுத்தப்பட்ட-மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் உட்பட பொருட்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனங்களை நடத்தத் தேவையான கட்டமைப்புக்களையும், நிதி ஆதாரங்களையும் உருவாக்குவது அரசின் கடமையாகும்
7. உற்பத்திச் செலவைக் குறைக்க இடுபொருட்களின் விலையைக் குறைக்க அதை ஒழுங்குபடுத்துவது, மானியம் அளிப்பது, திட்டங்கள் உருவாக்குவது, குறைந்த செலவாகும் நீடித்த வேளாண்மையை பரப்புவது ஆகியவற்றிற்கு அரசின் கடமைப்பட்டுள்ளது.
8. உண்மையான விவசாயிகளுக்கு பயன்கள் சென்று சேர வேண்டும்.

**அத்தியாயம் VI: குறைதீர்ப்பு மற்றும் இழப்பீடு**

1. வேளாண் பொருளுக்கு ARP கிடைக்கப்பெறாத எந்தவொரு விவசாயியும், தனக்குக் கிடைத்த விலைக்கும், ARP க்கும் உள்ள வித்தியாசத் தொகையைப் பெறும் உரிமை பெற்றவர்.
2. விவசாயப் பிரதிநிதி ஒருவர், வேளாண் துறையிலிருந்து ஒருவர், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையிலிருந்து ஒருவர் என மூன்று பேர் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டு, தனிப்பட்ட குறைமனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்கப்படும். அதேபோல், மாவட்டத்தில் சட்டத்தில்

உள்ளபடி சந்தையில் வேளாண் பொருட்களின் விலை உள்ளதா என இந்தக் குழு கண்காணிக்கும்.

3. தனிப்பட்ட விவசாயிகளைப் பொருத்தவரை, அறிவிக்கப்பட்ட எளிதான சரிபார்ப்பு முறையைப் பின்பற்றி, குறிப்பிட்ட காலத்திற்குள் பற்றாக்குறைத் தொகையை, இந்தக் குழு நிர்ணயிக்க வேண்டும்.
4. ஒரு குறிப்பிட்ட வேளாண் பொருளின் சராசரி விலை, சந்தையில் ARP யை விடக் குறைவாக இருக்குமானால், இந்தக் குழு, அந்தப் பொருளை விற்ற அனைத்து தகுதியுள்ள விவசாயிகளுக்கும், பற்றாக்குறைத் தொகையை அளிக்க பரிந்துரைக்க வேண்டும்
5. மேலே குறிப்பிட்டபடி இழப்பீடோ அல்லது உதவித் தொகையோ கிடைக்கவில்லையெனில், பாதிக்கப்பட்ட விவசாயி குறைதீர்ப்புக்கென மாநில ஆணையத்தை அணுகலாம்.

**அத்தியாயம் VII: குற்றங்களும், தண்டனைகளும்**

1. இந்தச் சட்டத்தின் பிரிவுகளை மீறி, ARP யை விடக் குறைவான விலையில் வேளாண் பொருளை வாங்கும் எந்த வணிகரும் ஒரு லட்சம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும்
2. மீண்டும் குற்றம் செய்தால் 2 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்
3. மூன்றாவது முறையும் சட்டத்தை மீறினால், 2 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு வணிக உரிமம் ரத்து செய்யப்படும்
4. கொள்முதல் மையங்களை குறிப்பிட்ட காலத்திலோ அல்லது போதுமான எண்ணிக்கையிலோ திறக்கவில்லையெனில், வேளாண் விற்பனைத்துறையின் மத்திய, மாநில உயரதிகாரிகள் அல்லது மாநில ஆணையத்தின் விசாரணையில் அடையாளம் காணப்படும் கடமையைச் செய்யாத அரசு அதிகாரிகள், 50,000 ரூபாய் வரை தண்டத்தொகை செலுத்த வேண்டும்

**அத்தியாயம் VIII: மத்திய, மாநில அரசுகளின் பொறுப்புகள்**

1. அனைத்து பொருட்களுக்கும் முழுமையான விலை நிர்ணய ஆய்வு செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்ய வேண்டும்
2. ஆணையத்தின் பரிந்துரைகள் வரப்பெற்றவுடன், கூடிய விரைவில் அனைத்து வேளாண் பொருட்களுக்கும் மத்திய அரசு விலை நிர்ணயித்து அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு மாநில அரசும் மத்திய அரசு நிர்ணயித்த ARP யை விட அதிகமாக ஊக்கத் தொகையை அறிவிக்கலாம்
3. அத்தியாயம் IV-யை நடைமுறைப்படுத்தவும், அத்தியாயங்கள் V மற்றும் VI ஆகியவற்றின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கைகள் எடுக்கவும், ஒவ்வொரு சந்தையிலும் வேளாண் பொருட்கள் எந்த விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன என்பதை கண்காணிப்பது

4. நடைமுறையிலுள்ள உணவுத்திட்டங்களுக்கென, வெவ்வேறு அரசமைப்புக்கள் மூலம் கொள்முதலுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியைத் தவிர்த்து, ARP நிதியமாக தொடக்கத்தில் 50,000 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்க வேண்டும். இது மாவட்ட அளவிலான குழுக்களின் ஆணைகளின்படி, ஆணை வந்த ஒரு மாத காலத்திற்குள் விவசாயிகளுக்கான பற்றாக்குறைத் தொகையை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப் பயன்படுத்தப்படும்.
5. மத்திய அரசு அறிவிக்கும் ARP-யை விட அதிக விலையை வழங்குவதற்கென, மாநில அரசுகள் தங்களுக்கான நிதியத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.